77

<u>பதிவஞ்சல் மூலமாக</u>

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை, சென்னை 600 106

முன்னிலை திரு.து.நா.இராமநாதன், இ.ஆ.ப .,

ந.க..எண்.13738/நி2/3/2010 நாள் 14.3.2012

பொருள் நிர்வாகம் - இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை – 2006-07 ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3 பணியிடத்திற்கு நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு ஒரு வருட பணி நிறைவு செய்தது தொடர்பாக பணி வரன் முறை செய்து – ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.3203/பிஎஸ்டி1/எ/2009 நாள் 2.6.2009

2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை கடித ந.க.எண்.54571/நி2/2/2009 நாள் 25.8.2009

3. இவ்வலுவலக பணி நியமன மற்றும் பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.12472/நி2/3/2009 நாள் 11.9.2009

4. முதல்வர், அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை கடித ந.க.எண்.4578/நி2/2009 நாள் 30.8.2009

5. இயக்குநர் மருத்துவம் மற்று ம் ஊரக நலப்பணிகள், சென்னை கடித ந.க.எண்.54571/நி2/2/2009 நாள் 2.12.2010

6. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், தர்மபுரி கடித ந.க.எண்.1777/நி/2010 நாள் 5.9.2011

7. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், திருநெல்வேலி கடித ந.க.எண்.986/அ1/2010 நாள் 16.9.2011 மற்றும் 28.9.2011

8. மாநில மருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அலுவலர் (இந்திய மருத்துவம்), சென்னை கடித ந.க.எண்.81/மாஉவ(இம)/2011 நாள் 20.9.011

9. முதல்வர், அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை கடித ந.க.எண்.4578/நி2/2009 நாள்28.9.2011

10. முதல்வர், அரசினர் ஓமியோபதி மருத்துவ கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம் கடித ந.க.எண்.2608/நி/2011 நாள் 31.10.2011

******

<u>ஆணை</u>

தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3 பணியிடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை மூன்றில் கண்டுள்ள இவ்வலுவலக பணி நியமனம் மற்றும் பணியமர்த்தல் ஆணையின்படி சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3

பணியிடத்திற்கு நியமனம் செய்யப்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள ஐந்து நபர்கள் அவர்களது பணியிடத்தில் அவர்களது பெயருக்கு எதிராக குறிப்பிட்டுள்ள தேதியில் பணியேற்றனர்.

| வ.எண். | சுருக்கெழுத்து தட்டச்சர் பெயர் மற்றும் பணிபுரியும் இடம் | பணியில் இணைந்த நாள் |
|---|---|---|
| 1 | திருமதி.ஆர்.ராஷ்மி,<br>மாநில மருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அலுவலர் அலுவலகம் (இந்திய மருத்துவம்) ,<br>சென்னை | 15.9.2009 முற்பகல் |
| 2 | திருமதி.நங்கையர் என்கின்ற மாலா,<br>அரசினர் சித்த மருத்துவ கல்லூரி,<br>பாளையங்கோட்டை | 14.9.2009 முற்பகல் |
| 3 | திருமதி.வி.சுமித்ரா,<br>மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம்,<br>தர்மபுரி | 17.9.2009 முற்பகல் |
| 4 | திருமதி.ஆர்.ஜானகி,<br>மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம்,<br>திருநெல்வேலி | 16.9.2009 முற்பகல் |
| 5 | திருமதி.எஸ்.ரேவதி,<br>அரசினர் ஓமியோபதி மருத்துவ கல்லூரி,<br>திருமங்கலம், மதுரை மாவட்டம் | 30.9.2009 முற்பகல் |

2) பார்வை ஐந்தில் கண்டுள்ள சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநரின் கடிதத்தில் பார்வை இரண்டில் கண்டுள்ள கடிதத்தின் மூலம் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறைக்கு ஒதுக்கப்பட்டு பார்வை மூன்றில் கண்டுள்ள இவ்வலுவலக பணி நியமன மற்றும் பணியமர்த்தல் ஆணை மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3ல் பணியிடத்தில் நியமிக்கப்பட்டவர்களின் பணியினை அவர்கள் பணியில் இணைந்த நாள் முதல் பணி வரன்முறை செய்து கொள்ளலாம் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

3) எனவே பார்வை ஐந்தில் கண்டுள்ள அலகு அலுவலரின் அறிவுரைக்கு ஏற்பவும் மற்றும் பார்வை ஆறு முதல் பத்து வரை இடம் பெற்றுள்ள சார்நிலை அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையிலும் வ.எண்.1 முதல் 5 வரை இடம் பெற்றுள்ள கீழ்கண்ட ஐந்து நபர்களுக்கும் அவர்கள் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3ல் பணியில் இணைந்த நாள் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண். | சுருக்கெழுத்து தட்டச்சர் பெயர் மற்றும் பணிபுரியும் இடம் | பணியில் இணைந்த நாள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | திருமதி.ஆர்.ராஷ்மி,<br>மாநில மருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அலுவலர் அலுவலகம் (இந்திய மருத்துவம்) , சென்னை | 15.9.2009 முற்பகல் |

| | | |
|---|---|---|
| 2 | திருமதி.நங்கையர் என்கின்ற மாலா,<br>அரசினர் சித்த மருத்துவ கல்லூரி,<br>பாளையங்கோட்டை | 14.9.2009 முற்பகல் |
| 3 | திருமதி.வி.சுமித்ரா,<br>மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம்,<br>தர்மபுரி | 17.9.2009 முற்பகல் |
| 4 | திருமதி.ஆர்.ஜானகி,<br>மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம்,<br>திருநெல்வேலி | 16.9.2009 முற்பகல் |
| 5 | திருமதி.எஸ்.ரேவதி,<br>அரசினர் ஓமியோபதி மருத்துவ கல்லூரி,<br>திருமங்கலம், மதுரை மாவட்டம் | 30.9.2009 முற்பகல் |

4) எனவே வரிசை எண்.1 முதல் 5 வரை இடம் பெற்றுள்ள சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3ல் பணிபுரியும் பணியாளர்களுக்கும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3 ஆக அரசுப் பணியில் சேர்ந்த நாள் முதல் அதாவது கட்டம் மூன்றில் அவர்களது பெயருக்கு எதிராக குறிப்பிட்டுள்ள நாள்முதல் பணி வரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகிறார். மேற்கண்ட ஐந்து 3–ஆம் நிலை சுருக்கெழுத்து தட்டச்சர் பணியாளர்களும் அவர்களின் தகுதிகாண் பருவமான இரண்டு வருட காலத்தை தொடர்ந்து மூன்று வருட பணிக்காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு மருத்துவ விதி தேர்விலும் மற்றும் கணிப்பொறியில் அலுவலக தானியங்கி சான்றிதழ் தேர்விலும் (Certificate Course in Computer on Office Automation) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

து.நா. இராமநாதன்
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
ஆணையாளர்

பெறுநர்

1. திருமதி. ஆர்.ராஷ்மி, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3, மாநில மருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அலுவலர் அலுவலகம் (இந்திய மருத்துவம்) , சென்னை )( மாநில மருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அலுவலர் (இந்திய மருத்துவம்), சென்னை மூலமாக

2. திருமதி.நங்கையர் என்கின்ற மாலா, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3, அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை )( முதல்வர், அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை மூலமாக

3. திருமதி.வி.சுமித்ரா, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3, மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம், தர்மபுரி )( மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், தர்மபுரி மூலமாக

4. திருமதி.ஆர்.ஜானகி, )( மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்,
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3, )( திருநெல்வேலி மூலமாக
மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம், )(
திருநெல்வேலி )(

5. திருமதி.எஸ்.ரேவதி, )( முதல்வர்,
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3, )( அரசினர் ஓமியோபதி மருத்துவ கல்லூரி,
அரசினர் ஓமியோபதி மருத்துவ கல்லூரி, )( திருமங்கலம், மதுரை மாவட்டம் மூலமாக
திருமங்கலம், மதுரை மாவட்டம் )(

<u>நகல்</u>

1. மாநில மருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அலுவலர் (இந்திய மருத்துவம்) , சென்னை )(
2. முதல்வர், அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை )(
3. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், தர்மபுரி )( **
4. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், திருநெல்வேலி )(
5. முதல்வர், அரசினர் ஓமியோபதி மருத்துவ கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம் )(

** பார்வை 6 முதல் 10 வரை இடம் பெற்றுள்ள சார்நிலை அலுவலர்களின் கடிதத்துடன் வரப்பெற்ற ஐந்து சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3 பணியாளர்களின் பணிப்பதிவேடுகள் மற்றும் கல்வி சான்றிதழ்கள் அசலாக இணைத்து சார்நிலை அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது. மேலும் பணிப்பதிவேடு மற்றும் கல்வி சான்றிதழ்கள் பெற்றுக் கொண்மைக்கு ஒரு ஒப்புகையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு சார்நிலை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் பணி வரன்முறை செய்து தொடர்பாக உரிய பதிவுகளை பணிப்பதிவேட்டில் மேற்க்கொள்ளுமாறு சார்நிலை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள், சென்னை 600006

7. முதன்மை ஆவணத் தொகுப்பு 2012

/உண்மை நகல்/ அனுப்பப்படுகிறது/

துணை இயக்குநர்( நிர்வாகம்) (பொறுப்பு)

அனுப்புகிறது

ந.க.எண் 488 /அ1/2012 நாள் 25.7.2012.

மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்
திருநெல்வேலி மாவட்டம்
(@) தென்காசி